# யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை

பருத்தித்துறை.

# பரிசளிப்பு விழா மலர்-2016

# யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை.

## பரிசளிப்பு விழா-2016

## பரிசளிப்பு விழா மலர்

## யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை.

### பரிசளிப்பு விழா-2016

(நிகழ்ச்சி நிரல்-2016.11.16)

- விருந்தினர் அழைப்பு
- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்மொழி வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- பரிசில் நாள் அறிக்கை
- ஆங்கிலப் பாடல் (தரம் 4,5)
- பரிசில் வழங்குதல் (தரம் 1-5)
- குழுப்பாடல்-(தரம் 7,9)
- சிறப்பு விருந்தினர் உரை
- பரிசில் வழங்குதல் (தரம் 6-11)
- அபிநயப்பாடல் ஆங்கிலம் (தரம் 7,8)
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்குதல்
- நாடகம் " CINTHERELLA"
- நாடகம் " மகிழ்ச்சி"
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

வாழ்த்துவோம்....

# வாழ்த்துவோம்...

கற்றவர்கள் சூழ வாழும்
தும்பளை நகரிலே
கலட்டி றோமன் கத்தோலிக்க
பாடசாலை நிழலிலே
பெற்றவர்க்கும் மற்றவர்க்கும்
பெருமை தேடித்தந்திட
பரிசு பெற்று மகிழும்
எங்கள் பாலர் தம்மை வாழ்த்துவோம்

கல்வி என்ற சோலையின்
கனிமரங்கள் நீங்களே
பள்ளி தன்னை அழகு செய்யும்
பாலர் கூட்டம் நீங்களே

இன்பச் சோலை தன்னில் நீங்கள்
இணையில்லாத சிற்பங்கள்
துன்பம் நீக்கி இன்பம் செய்ய
இறைவன் தந்த சொத்துக்கள்

கற்றவர்க்கும் மற்றவர்க்கும்
கருணை செய்யும் ஆண்டவன்
முற்றம் தன்னில் பரவி விட்ட
முதிர்ந்த பழக் கொத்துகள்
பொறுமை அன்பு உள்ளத்தோடு
பூதலத்தில் வாழவே
இறைவன் உன்னை அழகு செய்ய
இங்கு கொண்டு சேர்த்தனன்

கல்வி கற்று இன்பம் பெற்று
வெல்லும் வழி கண்டு நீர்
செல்வம் தொழில் சிறப்பு யாவும்
பெற்ற வாழ வாழ்த்துவோம்

ஆக்கம் திருமதி.பாலகௌரி கணேஸ்

(தமிழ்ப் பாட ஆசிரியை)

123Certificates

# பரிசளிப்பு விழா அறிக்கை 2016.11.16

எமது பாடசாலை பரிசில் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.மா.நவநீதமணி அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்து மகிழ்வித்துக்கொண்டிருக்கும் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும் பருத்தித்துறை பங்குத்தந்தையுமான வணக்கத்துக்குரிய A.J.யாவிஸ் அடிகளார் அவர்களே! ராஜா ராணி சேவை இல்ல இயக்குநரான கலாபூசணம் யோ.இருதயராஜா அவர்களே!

வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களே! அருட்தந்தை அவர்களே! பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே, உதவிக்கல்விப் பணிப்பாளர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, அருட்சகோதரிகளே, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, மாணவச்செல்வங்களே உங்கள் அனைவருக்கும் உளம் கனிந்த மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை சமூகத்தின் அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராகக் கலந்து பரிசளிப்பு விழாவினை சிறப்பித்துக்கொண்டிருக்கும் பருத்தித்துறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.மா.நவநீதமணி அவர்கள் இவ் விழாவில் கலந்து சிறப்பிப்பதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்றைய விழாவின் முதன்மை விருந்தினர் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று கலைப்பட்டதாரியாக வெளியேறினார். பட்டதாரி ஆசிரியராக யா/உடுத்துறை மகாவித்தியாலயத்தில் சிறப்பாகக் கடமையாற்றினார். பின்னர் யா/மருதங்கேணி இ.த.க பாடசாலை அதிபராகச் சேவையாற்றி பின்பு யா/உடுத்துறை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றினார். போக்குவரத்து கஷ்டம் நிறைந்த வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் சிறப்பாகக் கடமையாற்றியது குறிப்பிடக்கூடிய விடயமாகும். அதன் பின்னர் யா/குடத்தனை அ.த.க.பாடசாலை, யா/தேவரையாளி இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். தற்போது பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும் பங்குத்தந்தையுமான வணக்கத்துக்குரிய A.J.யாவிஸ் அடிகளார் ஆன்மீகப் பணியுடன் கல்விப்பணியிலும் சிறப்பாக செயற்பட்டு வருவதையிட்டு நாம் பெருமையடைகிறோம். எமது பாடசாலைக்கு வருகை தந்து ஒழுக்க விழுமியம், கற்றல் செயற்பாடுகள் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடி தனது ஆலோசனைகளை வழங்கி வருவது குறிப்பிடக்கூடிய விடயமாகும். மேலும் தான் எப்போதும் உங்களுக்கு பக்கபலமாக இருந்து செயற்படுவேன் என்று கூறியுள்ளது எமக்கு மிகப் பலமாக உள்ளது.

அழைப்பின் பேரில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் ராஜா ராணி சேவை இல்ல இயக்குநரான கலாபூசணம் யோ.இருதயராஜா அவர்கள் இப் பாடசாலையின் பழைய மாணவரும் முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், தற்போது பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினருமாவார். எமது பாடசாலை உயிர்ப்புடன் தொழிற்படுவதற்கு தொடர்ந்து தனது ஆலோசனைகளையும், வெளிநாட்டு பழைய மாணவர் தொடர்புகளையும் உதவிகளையும் பெறுவதற்கு உதவி புரிகின்றார். பாடசாலையின் பாரிய மாற்றத்திற்கு காரணமானவர்களில் முக்கியமானவராவார். 2012ம் ஆண்டு தொடக்கம் 2014ம் ஆண்டு வரை செயலாளராக செயற்பட்டார். இக் காலத்தில் பாடசாலையை முழுமையாக மாற்றியமைப்பதற்கு தனது உடல் உழைப்பை முழுநேரமாகச் செயற்பட்டு பாடசாலைக்காக அர்ப்பணித்தார்.

எங்கள் அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு வருகை தந்த பெரியோர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் மனமகிழ்ந்து வரவேற்று பாடசாலையின் பிரதான செயற்பாடுகளை முன்வைக்கின்றேன். தற்போது எமது பாடசாலை பாடவிதானம், இணைப்பாட விதானம், ஒழுக்கம், விழுமியம் போன்ற விடயங்களில் முன்னிற்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தொடர்ந்து எமது பாடசாலையில் கணிசமான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைவதும் 70 புள்ளிக்கு மேல் மாணவர்கள் பெறுவதும் சிறப்பிற்குரியது. க.பொ.த. (சா/த)ப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று நகரின் பிரபல பாடசாலைகளுக்குச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இணைபாடவிதான செயற்பாடுகளில் பெரு விளையாட்டான கபடிப் போட்டியில் 2009ம் ஆண்டில் இருந்து சாதனை படைத்து வருகின்றது. வலய மட்ட, மாவட்ட மட்ட, மாகாண மட்டம் என்ற நிலையில் இருந்து தேசிய மட்டம் வரை சென்று 2014ம் ஆண்டு தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமையும் ஒரு சாதனையாகும். இவ் ஆண்டு நடைபெற்ற கபடிப் போட்டியிலும் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

செல்வன்.அ.அஜித் நீளம் பாய்தல், 100m, முப்பாய்ச்சல் போன்ற விளையாட்டுக்களில் வலயமட்டத்தில் வெற்றி பெற்று நீளம் பாய்தலில் மாகாணமட்டத்தில் இரண்டாம் இடம் பெற்று தேசிய மட்டம் வரை சென்றமை குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

2015ம் ஆண்டு வலயமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றமையும் இவ்வாண்டு மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளில் தரம் 5, தரம் 4 மாணவர்கள் நான்காம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவதுடன் அதில் சில போட்டிகளில் வெற்றி பெறுவதும் குறிப்பிடக்கூடிய விடயமாகும். கணித புதிர் போட்டியில் இவ்வாண்டு தரம் 6 இல் அ.நிருபன் இரண்டாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் அஞ்சலியகப் போட்டிகள், நல்லொழுக்க நிறுவனப் போட்டிகள், சர்வதேச சிறுவர், முதியோர் தினப் போட்டிகள் என்பவற்றிலும் கலந்து கொள்கின்றோம். நல்லொழுக்க நிறுவனம் நடாத்திய சிறுவர் தினப்போட்டியில் தரம் 8 அ.அமலறொக்சன் 3ம் இடம் பெற்றுள்ளார். சிறுவர் சித்திரப்போட்டியில் 5ம் வகுப்பு பி.சங்கமன் 3ம் இடம் பெற்றுள்ளார். எனவே இவ்வாறான இணைபாட விதான செயற்பாடுகளில் கணிசமான அளவு வெற்றி பெறுவதற்கு பாடசாலை ஆசிரியர்களின் அரப்பணிப்பு மற்றும் மன்றங்களின் செயற்பாடுகள் இவர்களது தனித்துவமான ஆற்றல்கள் திறமைகள் வளர்க்கப்படுவதற்கு காரணமாகின்றது.

பௌதீக வள விருத்தியில் பாடசாலை பிரதான மண்டபமும் 40'x20' வகுப்பறைகள் வலயக்கல்வி அலுவலகத்தின் நிதியுடன் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பழைய மாணவரான திரு.டக்ளஸ் போல் அவர்கள் கபடி அணியினருக்கான சீருடை, கபடி அணி மாகாணம் தேசியம் செல்வதற்கான போக்குவரத்துச் செலவின் ஒரு பகுதி, போட்டியின் போது அவர்களை உற்சாகப் படுத்தி ஊட்டம் பெறுவதற்கான உணவு, பழங்கள் என்பன தொடர்ந்து வரும் போடடிகளில் வழங்கி வருவது குறிப்பிடக்கூடிய விடயமாகும். மேலும் அ.அனெஸ் ரூபா 15000.00 உம் திரு.இ.வின்சன்லீனஸ் அவர்கள் ரூபா 10000.00 வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே பாடசாலை வளர்ச்சியில் பழைய மாணவர் நலன்விரும்பிகள் அக்கறையாக உள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இருந்த போதும் பலவீனமும் எங்களில் காணப்படுவதனை இவ்விடயத்தில் குறிப்பிட வேண்டியவனாக உள்ளேன். மாணவர் ஒழுங்கற்ற வரவு, பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களிற்கு சமூகமளிக்காத பெற்றோர், மாணவர் தொகை போன்ற விடயங்களில் முன்னேற வேண்டியவர்களாக உள்ளோம். இப் பலவீனங்கள் களையப்படுமாயின் எமது பாடசாலை மேலும் வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை.

விஞ்ஞான ஆய்வுகூடமின்மை எமது நீண்டகாலத் தேவையாக உள்ளது. செயற்பாட்டறை, நூலகத்திற்கு போதியளவு நூல்கள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பன இல்லாதிருப்பது பெருங்குறைபாடாக உள்ளது.

எனவே இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு வலயக்கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கின்றோம்.

எனவே தடைகள் சவால்கள் என்பன இருந்தபோதும் இப் பாடசாலை தொடர்ந்தும் சிறந்த பாடசாலையாக திகழ்ந்து வருவது பலரது அயராத ஆக்கமும் ஊக்கமும் உழைப்புமாகும். குறிப்பாக வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பல கரங்கள் ஒன்றிணைந்ததாகும். எனவே இவ் வேளையில் இவ் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகும்.

இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கு அழைப்பை ஏற்று வருகை தந்த விருந்தினர்கள், நலன்விரும்பிகள், நிதியுதவி வழங்கியோர், பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்து பரிசில் நாள் அறிக்கையை சமர்ப்பித்து நிறைவு செய்து விடைபெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

**மாணவர் விபரம்**

| தரம் | தொகை |
|---|---|
| 1 | 14 |
| 2 | 10 |
| 3 | 16 |
| 4 | 15 |
| 5 | 17 |
| மொத்தம் | 72 |

| | |
|---|---|
| 6 | 19 |
| 7 | 17 |
| 8 | 13 |
| 9 | 16 |
| 10 | 16 |
| 11 | 13 |
| மொத்தம் | 166 |

| ஆசிரியர் விபரம் | |
|---|---|
| 1. திரு. திரு.அ.அ.வி.மரியநாயகம் | SLPS 2 |
| 2. திருமதி.மே.மரியபொர்ணாண்டோ | SLTS 1 |
| 3. திரு.எஸ்.துரைராசா | SLTS 1 |
| 4. திரு.மா.தவலிங்கம் | SLTS 2.II |
| 5. திரு.கி.சேயோன் | SLTS 2.II |
| 6. திரு.பா.ரகுநாதன் | SLTS 2.II |
| 7. திரு.இ.முகுந்தன் | SLTS 3.I |
| 8. திரு.பா.பாஸ்கர் | SLTS 2.II |
| 9. திரு.சி.சிவானந்தபிரகாஸ் | SLTS 2.II |
| 10. திரு.க.ஞானசீலன் | SLTS 2.II |
| 11. திருமதி.பி.ஈஸ்வரன் | SLTS 1 |
| 12. திருமதி.வி.சிவகடாட்சம் | SLTS 1 |
| 13. திருமதி ப.சின்னப்பு | SLTS 2.I |
| 14. திருமதி பா.கணேஸ் | SLTS 2.I |
| 15. திருமதி.சி.பிரபாகரன் | SLTS 2.II |
| 16. திருமதி சு.சுதர்சன் | SLTS 2.II |
| 17. திருமதி.பி.சுதர்சன் | SLTS 2.II |
| 18. திருமதி.தா.சுவேந்தன் | SLTS 2.II |
| திரு இ.மகேந்திரராஜா<br>திரு.இ.இராஜிதகுமாரர் | கல்வி சாரா ஊழியர்கள் |

## 2015 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

1. ஞ.பிரான்சிஸ் ஜெனா 158
2. றொ.விதுர்ஜன் 155

## க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை சித்திபெற்றோர்

1. மே.போல்ஜேசுரட்ணம் 7A, 1B, 1S
2. றெ.றொனாட்டோ 3A, 2B, 1C, 3S
3. அ.அமல்ராஜ் 3A, 2B, 2C, 2S
4. ர.றொக்சன் 2A, 3C, 3S
5. அ.அஜன்சன் யுகின்ராஜ் 1A, 1B, 1C, 3S

## விளையாட்டு நிகழ்வுகள்

### செயற்பட்டு மகிழ்வோம்

1. அ.நிருபன்
2. டே.டினுசன்
3. கே.அஜே
4. றொ.விதுர்ஜன்
5. செ.குணரட்ணம்
6. அ.அருள்நிதர்சன்
7. க.பிரசன்னா
8. செ.செந்தூர்க்குமார்
9. கி.கிதுன்
10. வி.விதுசன்
11. ரா.பிறேம்குமார்
12. எ.லுபின்சன்
13. லூ.கபிலாஸ்
14. இ.விஜயராஜ்

**மெய்வல்லுநர்**

1. யு. அஜித் மாகாண மட்டம் 5ம் இடம் (நீளம் பாய்தல்)

**கராத்தே**

1. யு. அனுஸ்ரன் வலய மட்டம் 2ம் இடம்

**15 வயதின் கீழ் கபடி**

1. A.அன்ரன்பிறின்சன்
2. T. ஸ்ரெனின்லாஸ்
3. P. துசிகரன்
4. U. செல்வகுமார்
5. J. றொபின்டர்சன்
6. A.R.R. றொக்சன்
7. A. அஜந்தன்
8. P.தோமஸ்நிதர்சன்
9. J. ஜொனிஸ்ரன்
10. R.S. வினித்குமார்
11. A. அனுஸ்ரன்
12. A.A. நிலோஜன்

**17 வயதின் கீழ் கபடி**

1. Y. கனிஸ்ரன்
2. J. ஜுட்சுஜாந்தன்
3. R. றொன்சன்
4. A. அஜித்
5. R. றெஜிராஜ்
6. A.V.A. விமல்ராஜ்
7. T. சுதரவராஜ்
8. R. பாரதிராஜ்
9. K. அஜந்தன்
10. S. தேவப்பிரியன்
11. N. டிலக்சன்
12. C.A.சிஜோசன்

**19வயது எறிபந்து**

1. K. அஜந்தன்
2. R. றொனாட்டோ
3. A.V.A. விமல்ராஜ்
4. R. றெஜிராஜ்
5. S. தேவப்பிரியன்
6. A. அஜித்
7. R. றொன்சன்
8. A. யூகின்ராஜ்
9. J. ஜுட்சுஜாந்தன்
10. R. பாரதிராஜ்
11. C.A. சிஜோசன்
12. S. சுதர்வராஜ்

**பரிசில் பெறுவோர் விபரம்**

## ஆரம்பப் பிரிவு

| தரம் | பரிசு பெறுவோர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | த.தனுஜன் | தமிழ், சுற்றாடல், கத்தோலிக்கம் |
| | வெ.ஜேசுதாஸ் | கணிதம் |
| | யோ.ஜெக்ஸ்மன் | கணிதம் |
| **முதன்மை நிலை மாணவன் - த.தனுஜன்** | | |
| 02 | மி.மாக்கஸ் | தமிழ், கத்தோலிக்கம் |
| | பி.பிரவீன் | கணிதம், சுற்றாடல் |
| | ச.சதீஸ்குமார் | இந்துசமயம் |
| **முதன்மை நிலை மாணவன் - பி.பிரவீன்** | | |
| 03 | வி.வினுஸ்ரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் |
| | ச.அர்சான் | ஆங்கிலம், இந்துசமயம் |
| **முதன்மை நிலை மாணவன் - வி.வினுஸ்ரன்** | | |
| 04 | அ.சுஜிஸ்ரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் |
| | இ.றூபடிலைக்சன் | ஆங்கிலம் |
| **முதன்மை நிலை மாணவன் - அ.சுஜிஸ்ரன்** | | |
| 05 | அ.நிருபன் | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், இந்துசமயம் |
| | அ.அருள்நிதர்சன் | கத்தோலிக்கம் |
| **முதன்மை நிலை மாணவன் - அ.நிருபன்** | | |
| 06 | செ.குணரட்ணம் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், கத்தோலிக்கம், புவியியல் |
| | த.தனுஷ் | இந்துசமயம |
| | டே.டேவிட்டிலைக்சன் | வரலாறு, குடியியற்கல்வி, செய்.தொ.நுட், சுகாதாரம்,சித்திரம் |
| | சு.சுமன்ராஜ் | சங்கீதம் |
| | சி.கிருஷணன் | ஆங்கிலம் |
| **முதன்மை நிலை மாணவன் - டே.டேவிட்டிலைக்சன்** | | |
| 07 | ஜோ.அமலறொக்சன் | கத்தோலிக்கம், புவியியல், வாழ்.குடியுரிமை, சித்திரம், செ.மு.தொ.நுட், சுகாதரரம் |
| | எ.லக்சன் | ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு |
| | பெ.ஜதுசன் | தமிழ், கணிதம், சங்கீதம் |
| | சு.துசாந்தன் | இந்துசமயம் |
| **முதன்மை நிலை மாணவன் - ஜோ.அமலறொக்சன்** | | |
| 08 | நி.யேசுக்குட்டி | தமிழ், கணிதம்,கத்தோலிக்கம், புவியியல், வாழ்.குடியுரிமை, செ.மு.தொ.நுட், சுகாதரரம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம், கத்தோலிக்கம |
| | அ.அருள்நிதுஷன் | சித்திரம் |
| **முதன்மை நிலை மாணவன் - நி.யேசுக்குட்டி** | | |

| | | |
|---|---|---|
| 09 | ம.மரியலிவின்சன் | கணிதம்,கத்தோலிக்கம், புவியியல், வாழ்.குடியுரிமை, விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம், செ.மு.தொ.நுட் |
| | உ.செல்வக்குமார் | இந்துசமயம் |
| | யோ.ஜொனிஸ்ரன் | தமிழ், |
| | ஜெ.ஜெனிராஜ் | ஆங்கிலம், செ.மு.தொ.நுட் |
| | கே.அனிஸ்ரன் | சுகாதாரம் |
| **முதன்மை நிலை மாணவன் - ம.மரியலிவின்சன்** | | |
| 10 | அ.அஜித் | கணிதம், குடியுரிமை, விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் |
| | வி.விமல்ராஜ் | சுகாதாரம், கத்தோலிக்கம் |
| | றெ.றொண்சன் | தமிழ், சங்கீதம் |
| | டே.டிலைக்சன் | நீரியல் தொ.நுட், சித்திரம் |
| **முதன்மை நிலை மாணவன் - அ.அஜித்** | | |
| 11 | மே.போல்ஜேசுரட்ணம் | தமிழ், கணிதம், குடியுரிமை, விஞ்ஞானம், வரலாறு, கத்தோலிக்கம், நீரியல் தொ.நுட், சங்கீதம் |
| | றெ.றொனாட்டோ | ஆங்கிலம் |
| | ர.றொக்சன் | சித்திரம் |
| **முதன்மை நிலை மாணவன் - மே.போல்ஜேசுரட்ணம்** | | |



# பாடசாலைக் கீதம்

**இயற்றியவர் - திரு.சீ.சிவப்பிரகாசம் - 2002**
**இராகம் - பிரிந்தாவன் சாரங்கா**

எங்கும் மகிமை கொண்டிலங்கும் - இந்த
ஏற்றம் மிகுந்த வடமராட்சி
தும்பளை ஊரினில் விளங்கிடும் கலட்டி
றோமன் கத்தோலிக்கப் பாடசாலை
தந்தையர் தோமசு அந்தோனி என்கின்ற
புனிதர்கள் கோயில் நிழலினிலே
தங்கி அறிவொளி பரப்புகின்ற - எங்கள்
சாலையை வாழ்த்தி வணங்குவோமோ
எண்ணை எழுத்தை அடிப்படையாய் கொண்டு
எல்லாக் கலைகளும் கற்பித்திடும்
எங்கள் பாடசாலை சாதி பேதம் இன்றி
எல்லோர்க்கும் மேலிடம் அளித்திடுமோ
ஒன்றே கடவுள் ஒன்றே குலமென்ற
உண்மையை ஊரவர் அறியும் வண்ணம்
நன்றே கலைகளை மாணவர்க்கே ஊட்டும்
நடை முறை கொண்ட எங்கள் பாடசாலை
கடமை கண்ணியம் கட்டுப்பாடுகளை
கற்றிடும் போதினில் கடைப்பிடிக்க
மாணவர் தங்களை ஊக்குவிக்கும் - எங்கள்
மாண்பு நிறைந்த பாடசாலை
எட்டு திசைகளும் விட்டுக் கிளைகளை
எறிந்து வளர்கின்ற ஆல் போல
என்றுமே நிலை கொண்டு வாழிய வாழிய
எங்கள் கத்தோலிக்க பாடசாலை.

123Certificates




நமது ஆளணியினர் - 2016